# உலகத் தமிழர் குரல்

# ULAKA THAMILAR KUTAL

ஒலி - 17 ★ புரட்டாதி - ஐப்பசி 1997 ★ குரல் - 14

சஞ்சிகை - 2

அரசியல் கலப்பற்றது

## மிழ்ப் பண்பாட்டு சிறப்பிதழ்

- ★ இலங்கையில் அமைதி
- ★ இலங்கையில் பூர்விகக் குடிகள்
- ★ மனிதநேயம்
- ★ கற்பும் களவியலும்
- ★ ஈழத்துக்காந்தி செல்வா
- ★ திருக்குறளை மறந்ததால் தமிழன் கெட்டான்
- ★ 2000 ஆண்டில் உலகம் அழியும்?
- ★ தமிழர் என்றால் அகதிகள்?
- ★ அந்தமான் தமிழர் கல்விக்குறைகள்


மற்றும் பல அம்சங்கள்

விலை ரூபா 15/-

**உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்**

# திருக்குறளறமே உலகத்தமிழரை ஒருங்கிணைக்கும்!

# அரசியல் பிழைத்தார்க்கு அறமே கூற்றம்!!



ஆயிரத்தெட்டு வகையாகப் பகைப்புலனுடன் பிரித்துத் திரிந்து கிடக்கும் உலகத் தமிழனை திருக்குறள் வேதமே திருத்தி வாழவைக்கத் தகுந்தது. உலக ஒற்றுமை — சமாதானம் அமைதி ஏற்பட வேண்டுமானால் முதலில் திருக்குறளை வீடுகளில் தமிழர் ஓதி வரவேண்டும்! திருக்குறளான தமிழ்மந்திரத்தை ஓத மறந்ததால் தமிழர் கெட்டனர்.

*பேராசிரியர்:* **இர. ந. வீரப்பன்** *அவர்கள்*

திருக்குறள்உலகமொழிகளில், முப்பதுக்கு மேற்பட்ட அம்மொழிகளில் ஏன் எழுதப்பட்டன என்பதே இதற்குக் காரணம் உலகப் பொதுமறையாக அது விளங்குகிறது. ஆதியில் உலகில் பல நாடுகளில் குடிபுகுந்து வாழ்ந்ததும் தமிழரே! உலக மொழிகள் உற்பத்தியாவதற்கு மூலவித்துகளைத் தந்ததற்கு தமிழ் வேர்களே அடிப்படையாக இருந்தன.

பல்லாயிரம் ஆண்டுக்கு முன்பே, உலகில் முதலில் தோன்றியவன் தமிழன்; முதல்மொழியாகத் தோன்றிப் பரவியதும் தமிழே! ஏன் இன்று தமிழும் — தமிழரும் ஆகக் கடைசியில் நிற்கப்பட்டிருக்கிறார்கள்?

அன்றும் — இன்றும் நூறு நாடுகளில் தமிழர் வாழ்ந்தும் பாதி நாடுகளில் தமிழை இழந்தனர். தாய்மொழி பேசும்

அடையாளமே இவர்களிடம் இல்லாமல் போயிற்று ஏன் இந்த நிலை? எப்படி ஏற்பட்டது இந்தக் கொடுமை?

பலமதங்களில் சாய்ந்தான் பிறமொழிகளைப் பயின்றான்! தாய்மொழி பேசாத இவனிடமிருந்து அறம் போய்விட்டது! பிளவும் உளவுமாக மாறி கள்ளர்களானார்கள். தமிழ்மந்திரம் இவனது உணர்விலிருந்து, உயிரிலிருந்து பிரிந்துவிட்டது சுசடு உள்ளவனாக வெறுந் தமிழனாக உலவுகிறான்!

செந்தமிழராக மாறுதவரை, அறம் வளராது. வாய்மை பலிக்காது. இழந்தவற்றை மீட்கும் பண்பாடுதான் இறைமை என உயிர்ப் போராட்டம் நடத்த வேண்டும்! உலகத்தமிழன் உய்ய இதுவே வழி!


# நல்ல உள்ளங்களுக்கு

தமிழினமொழி பண்பாட்டுக் கலாச்சார வளர்ச்சிப் பணிகளுக்கு உதவிட வேண்டிய அவசியம் உணரப்பட வேண்டும். பல தமிழறிஞர்கள், படைப்பாளிகள் தமது ஆக்கங்களை அச்சிட்டு நூலாக்கி மக்களுக்கு அர்ப்பணிக்க முடியாமல் இருக்கின்றார்கள். இவர்களின் நிலைமையை தமிழினமொழி பண்பாட்டு வாழ்விலும் முன்னேற்றத்திலும் கனிவும், கரிசனையும் கொண்ட பொன்மனச் செம்மல்களான புரவலர்கள் தமிழ் நூல்கள், ஏடுகள் வெளியிட்டு பயன்தர நிதியுதவி ஆதரவுகள் நல்க மனமுவந்து முன் வரவேண்டுமென்று விரும்புகின்றோம்.

இன்று உலகளாவிய ரீதியில் உள்ள தமிழர் சமுதாயங்களிடையே இனமொழி பண்பாட்டு நட்புறவுகளை 20 ஆண்டுகளுக்கு மேலாக வளர்த்துவரும் உ. த. ப. கழகத்தின் நூல்களை அச்சேற்றிப் பரப்புவதற்கும், உ. த. குரல் ஏட்டினைக் காலந்தோறும் பிரசுரிப்பதற்கும், தமிழ்மண், தமிழியம், போன்ற உ. த. ப. இன் இதழ்களை மறுபிரசுரஞ் செய்வதற்கும் போதுமான நிதியாதாரங்களில்லாமல் தடங்கல்கள் அமைந்து வருகின்றன. இதை மனதில் கொண்டு உணர்ந்து, எமது தமிழ்ப் பணிகளுக்கு தாராள மனதுடன் நிதியுதவி அளிக்கச் சில பெருமக்களாவது முன்வரவேண்டுமென்று விழைகின்றோம். இந்த உயரிய பணிக்கு உதவ விரும்பும் நல்லோர் தயை கூர்ந்து அஞ்சல் வரையும் வண்ணம் அன்புடன் கேட்கின்றோம்.

நன்றி.

அஞ்சல் முகவரி – ஆசிரியர், உலகத்தமிழர் குரல்
52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



# மாண்புறும் மனிதர்

## திரு. பொன். பூலோகசிங்கம் அவர்கள்

பிரபல வழக்கறிஞரும், வெளிவாரி பல்கலைக் கழக விரிவுரையாளருமான திரு. பொன். பூலோக சிங்கம் அவர்கள் கடந்த யூன் மாதத்திலிருந்து அரச நீதித்துறையில் யாழ் பிரதேச சத்திய ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் உ. த. ப. கழகத்தின் முக்கிய பிரமுகராவர். எழுத்தாளரான இவர் உ. த. ப இன் இலங்கைக் கிளையின் முன்னாள் தலைவராகப் பணி செய்தவரென்பது குறிப்பிடத்தக்கது.

# மொறிசியஸ் பெரியார் தங்கணமுத்து அவர்களின் மறைவு

மொறிசியஸ் நாட்டின் பிரபல தமிழ்ப்பெரியார் திரு. எம். தங்கணமுத்து அவர்கள் கடந்த மாசிமாதம் இயற்கையெய்தி விட்டார். இவர் மொறிசியஸ் உ. த. ப இயக்கக் கிளையின் தலைவராகப் பணியாற்றி வந்தவர். இவர் உ. த. ப. இன் 02வது உலக மகாநாடு மொறிசியஸ் நாட்டில் அரசாங்கத்தின் பேராதரவோடு நடத்துவதற்கு பக்கத் துணையாக இருந்த நல்ல மனிதர். மொறிசியஸ் முன்னாள் ஜனாதிபதி அமரர் வீரசாமி ரெங்காடுவின் உறவினரான இவர், பிரபல்யம் மிக்க தோட்டத்துரையாக விளங்கியவர் இலங்கைத் தமிழர்

களின் உரிமைக்காக பலகாலமாக குரல் கொடுத்து வந்த பெரியார் தங்கணமுத்துவின் இழப்பு தமிழினத்தின் பேரிழப்பாகும். அவரின் இழப்பால் துயருறும் அமரரின் குடும்பத்தினருக்கு நமது இதய அஞ்சலியை செலுத்துவோமாக!

## மேலை நாடுகளில் தமிழரும் தமிழ்க்கல்வியும்

– க. தமிழினி –

மேற்குத் தேசங்களான இங்கிலாந்து, பிரான்ஸ் ஜேர்மனி, சுவிஸ் மற்றும் அமெரிக்கா, கனடா போன்றவற்றில் 20, 30, ஆண்டுகளாகக் குடியேறித் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களில் அநேகமானோர் ஈழத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களில் பலர் தமது குழந்தைகளுக்குத் தாய்மொழியாம் தமிழைக் கற்பித்து வருகின்றார்கள். இன, மொழி, பண்பாடுகள் வேறுபட்டுள்ள மேற்படி நாடுகளில், தம்மைத் தமிழரென இனங்காட்டும் நோக்கில், தமிழ்மொழியை, பண்பாட்டை மறக்காமல் வாழ்ந்து வருகின்றார்கள். அந்நிய மொழிகள், கலாச்சாரங்களில், தமிழர்கள் வீழ்ந்து விடும் ஆபத்தும் உள்ளது. ஆகையால் தாய்மொழி போதிக்கும் விடயத்தில் வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தாம் தமிழர் என்பதை இனங்காட்டி வாழ மொழியும் பண்பாடும் அவசியமாகும். தமிழை மறந்துவிடும் தமிழர்கள் காலப்போக்கில் இன உறவை இழந்துவிட முடியும். எங்கு வாழ்ந்தாலும், தமிழை பேசவும் எழுதவும், கற்று வருபவர்கள் தொடர்ந்து தமிழர்களாகவே இருப்பார்கள்.

தமிழை பேச, எழுத தெரியாது தாயகத்துக்கு திரும்பும்போது அவர்களை யாரும் மதிக்கப் போவதில்லை. தமிழ்ச் சமுதாயம் இவர்களை தமிழர்களென்று ஏற்றுக் கொள்ளாது. எனவே தமிழர் தமது மொழியை மறக்காமல் எங்கும் வாழ்வது சமுகக் கடமையாகும்.

எண்ணம்

# இலங்கையில் அமைதி

இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்து விளங்கும் அழகான தீவு நாடு. இராவணேஸ்வரன் காலத்தில் இலங்காபுரி எனப் போற்றப்பட்டது. இந்த நாட்டின் தென் மத்தியில் மலை வளமும் நாட்டைச் சுற்றிவர அலை கொஞ்சும் எளில் கொண்ட கடல் வளமும் நாடளாவி நின்று பசுமை விஞ்சும் தாவரச் செழுமைச் செறிவும் விவசாயம் மற்றும் தொழில் வளங்களும் ஏனைய இன்பந்தரும் இயற்கை வனப்புக்களும் நிறைந்து கண்ணையும் கருத்தையும் கவர்ந்து நிற்கின்றன.

இந்த நாடு தமிழர், சிங்களவர், இசுலாமியர், பறங்கியர் ஆகிய பல்லின மக்களின் தாயகமாக விளங்கி வருகின்றது இங்கே தமிழர், இயக்கர், நாகர் வழி வந்த திராவிடப் பூர்வீகக் குடியினராவர். பின்னாளில் இங்கே வந்த சிங்கள சாகியத்தாரின் காலம் 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டதென்று மகாவம்ச வரலாறு கூறும். சிங்கள மக்கள் தற்போது நாட்டில் பெரும்பான்மையினராவர். தமிழ் பேசும் மக்கள் மொத்த சனத்தொகையில் மூன்றிலொரு விழுக்காட்டினராவர். இந்த தேசத்தில் இரண்டாயிரமாண்டுகளாக வெவ்வேறு இராச்சியங்களில் வாழ்ந்து வந்த இரு இனமக்களும் சமாதானமாக வாழ்ந்திருக்கின்ற வரலாறு உள்ளது. 15ம் நூற்றாண்டில் இந்த தேசத்தில் அந்நியர் ஆதிக்கம் ஏற்பட்டது. தொடர்ந்து 450 ஆண்டுகள் போத்துக்கேயர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய ஆதிக்கத்தாரின் ஆட்சியில்கூட இந்த இரு இனமக்களும் சமாதான சகவாழ்வு வாழ்ந்த கதையை வரலாறு சொல்லும்.

1948ல் இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. சுதந்திரத்துக்குப்பின் உண்டான அரசியல் மாற்றங்கள் நாட்டைச் சின்னாபின்னமாக்கும் நோக்கில் அமைந்தது. அன்று துவங்கி உண்டாக்கப்பட்ட அரசியல் நடை

முறைகள் சட்டவாக்கங்கள், சிறுபான்மையினரான தமிழர்களுக்கு விரோதமான முறையில் அமைந்து வந்தன.

இவற்றின் காரணமாக இனம், மொழி, மதம் பிரதேச வேறுபாடுகள் தோன்றி வாதப் பிரதிவாதங்கள் கருத்து வேற்றுமைகள், உருவாகி முறுகல்நிலை கல வரங்கள், வன்முறைகள் வளர்ந்து வந்தன. இவற்றால் இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் தோன்றலாயின. இந்த நிலையில் மாறிமாறி ஆட்சிக்கு வந்த இந்த நாட்டின் பெரிய அரசியல் கட்சிகள் இன முறுகல நிலைக்கு இனப்பிரச்சினைகளுக்கு முடிவு கட்டி இனங் களுக்கிடையிலான ஒற்றுமையை ஏற்படுத்த தவறி விட்டன. இதன் காரணமாக நாட்டில் நிலவி வந்த இனப்பிரச்சினை விஸ்வரூபமெடுத்து பாரிய யுத்தமாக வெடித்து இன்றுவரை 13 ஆண்டுகளாக கோரத்தாண்டவ மாடி வருகின்றது. நாட்டையும் மக்களையும் வளம் படுத்தி வாழ்விக்க வேண்டிய பெருநிதி கோடிக்கணக்கில் யுத்தத்துக்கு முதலீடு செய்யப்பட்டு வீணடிக்கப்பட்டுவரு வது நாட்டுக்கு உண்டான துர் அதிஷ்டமாகும். இந்தயுத் தம் நீதிக்குப் புறம்பானதால் இதில்லாபம் பெறமுடியுமா? மாறாக சொந்த நாட்டு மக்கள் அழிக்கப்பட்டும், பூமிச் செல்வங்கள் நாசமாகியும், சொத்துக்கள் சேதமாகியும் வருவதுதான் கிடைத்து வரும் நஷ்டங்களாகும்.

இன்றுவரை ஆயிரமாயிரம் ஆண்டுகளாக பிரச் சினையில்லாமல் வாழ்ந்து வரும் இந்த தேசத்தின் மக்கள் போரினாலும் பொருளாதாரச் சீரழிவினாலும் உயிர்ப் பலிகளையும் அவலங்களையும் சந்திக்கின் றார்கள். மனித உயிர் வாழ்வுக்கு எதிரான செயற் பாடுகள் நாளாந்த நடைமுறையாகி வருவது வேதனைக் குரியது.

இந்தப் போர் தேவைதானா? மனிதர்கள் வாழப் பிறந்தவர்கள். வாழவேண்டும். நன்மை பெறவேண்டும்

என்ற நல்லெண்ணங்கள் எங்கே ஒளிந்து போய் விட்டன?

சுதந்திரம் மனிதனது பிறப்புரிமை இந்த உரிமையை எந்த மனிதனும் மறுக்கவோ பறிக்கவோ கூடாது. மனிதன் வாழ அரசியல் செயற்பாடுகள் பக்கத் துணையாக வேண்டும். அவனை அழித்துவரும் அரசியல் நடைமுறைகள் வேண்டியதில்லை மனிதனுடைய வாழ்வுகும் வளமான முன்னேற்றத்துக்கும், இனம் மொழி மதம் போன்ற வேறுபாடுகள், பேதங்கள், குறுக்கே நிற்க வேண்டிய தேவையில்லை. மனிதனை மனிதன் மதித்து அன்பு கொண்டு வாழும் உயரிய பண்பு மலரவேண்டும். ஆகையால் நடந்து வரும் கொடுமையான நாகரிக மற்ற போர்கள் உடனே நிறுத்தப்படுவதுடன் தமிழ் மக்களிடம் பறிக்கப்பட்டு மறுக்கப்பட்டு வரும் எல்லா உரிமைகளும் கிடைக்க நல்ல வழி காணப்படுதல் சிறந்த அரசியல் வாழ்வுக்கு இட்டுச் செல்லும். இதை மறந்து நடந்து வரும் மனித வாழ்வுக்கு இடரான செயல்முறைகள் தொடருமானால் நம்முடைய அழகான தேசம் சிந்தும் குருதியில் செந்நிறமாகி காலப்போக்கில் சாம்பல் மேடாகிவிடும் நிலை தோன்ற வேண்டுமா?

நமது இந்துமாக்கடலின் முத்தாக விளங்கும் தேசத்தின் வளங்களும், மக்களின் குதூகலிக்கும் வாழ்க்கைச் சிறப்புக்களும் சீர்குலைந்து அலங்கோலப்படும் போது மனிதபிமானமுள்ள ஜீவன்கள் தெய்வத்தை நோக்கி ஏக்கப்பெருமுச்சு விடுகின்றன.

மானுடன் யாராக இருந்தாலும் வாழும் உரிமை வேண்டும். மனிதநேயமும் அன்பும் மக்களிடையே மலர வேண்டும் மக்களின் தனிமனித சுதந்திர உரிமைகள் அடிப்படை வாழ்வியல் உரிமைகள் மற்றும் இன, மொழி மத, பிரதேச உரிமைகள் மதிக்கப்பட்டு பாதுகாக்கும் உரிமைகள் நிலைபெற வேண்டும் மதங்கள் கூறும் தர்மங்கள் செயல் வடிவில் நடைபயில தர்மவான்கள் அறவோர்கள் பணி செய்ய வேண்டும். அறிவாளிகளின்

செயல் திறன்களும், பங்கும் பணியும் மனிதன் வாழ உறுதுணைபுரிய வேண்டும். இன்று மக்கள் படும் துன்பங்கள் மனிதநேயத்துடன் அணுகப்பட்டு, தீர்வுகாண அரசியல் அதிகாரம் பெறுவோர் முன்வரவேண்டும்.

எனவே இந்த நாட்டில் மக்களிடையே சமாதான சகவாழ்வு மலரவும் மனித குலத்தை அழித்துவரும் யுத்த பூதம் மறையவும் எல்லாம் வல்ல இறைவன் துணை புரிய வேண்டி நிற்போமாக.

சுபம்

அன்புடன் ஆசிரியர்

ஆ. சண்முகலிங்கம்

---

## உ. த. ப. கழகத்தின் உலகத் தலைமைக்குழு 1997 - 1998

**தலைவர்:**

பேராசிரியர் திரு. இர. ந. வீரப்பன் அவர்கள்
(மலேசியா)

**செயலர்:**

திரு. கே. ரி. கணேசலிங்கம் அவர்கள்
(நீனே, ஜேர்மனி)

**பொருளாளர்:**

திரு. ம. மனோகரன் அவர்கள்
(பேர்ண், சுவிஸ்லாந்து)

---

# தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

இ தவகோபால்

தமிழில் பதின்மூன்று எழுத்துக்களுக்கு சீர் அமைப்பு செய்த செயற்பாடு தவறானது பிழையானதென்பதை தமிழறிஞர்கள் இப்போது உணரத் தொடங்கி விட்டார்கள் கணணி தமிழ் எழுத்துக்களை வடிவமைக்கத்தான் இந்தச் சீரமைப்பு

(28ம் பக்கம் பார்க்க)

# மனித நேயம் மலர வேண்டும்

உயிரினங்களில் மனிதன் உயர்ந்த இடத்தை வகிக்கிறான். மற்ற உயிர்களைவிட இவனுக்கு பகுத்தறிவு என்றதொரு ஆறாவது அறிவு இருப்பதனால் இவன் முதன்மை நிலை பெறுகின்றான். மனித வரலாற்றில், மனித வாழ்வில், அவனுடைய வாழ்வியலும், மனித நேயமும் மானுட தர்மங்களும் போற்றப்பட்டு வருகின்றன.

புராதன மனித சமுதாயம் இயற்கையோடு இயைந்து இன்ப வாழ்வு வாழ்ந்து வந்தது. இன்றைய மனித பரம்பரையினர் இயற்கையோடும் செயற்கையோடும் கலந்து இயைந்து இன்பமும், துன்பமும் அனுபவிக்கின்றனர்.

பல மாந்தர்கள் தம் அறிவாற்றலால் உணர்வுகளால் உள்ளார்ந்த ஞானங்களால் உலகில் மனிதன் அமைதியாக, நிம்மதியாக வாழப் பல வழிகளைச் சொல்லியும், எழுதியும், வைத்திருக்கின்றார்கள். சிலர் அவற்றின் வழியில் வாழ்ந்து காட்டியும் சென்றுள்ளனர். தமிழின் வரலாற்றில், திருமூலர் திருவள்ளுவர், தொல்காப்பியர் கணியன்பூங்குன்றனர், ஔவையார், அதிவீரராமபாண்டியன் போன்ற பெருமக்கள், ஞானத் திலகங்கள், வாழ்க்கையில் மனிதர்கள் அறிந்து உணர்ந்து. கடைப்பிடித்து வாழ்க்கையை வாழ வைக்கும் நன்னெறிகளாம் பொன்னெறிகளைக் கூறிப்போந்தனர்.

''ஒழுக்கம் விழுப்பந்தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும்'' இது வள்ளுவர் தந்த பொய்யா மொழி.

''யாதும் ஊரே யாவரும் கேளீர்''! இதைத் தந்தவர் கணியன்பூங்குன்றனர்.

''ஆற்றங்கரை மரமும் அரசோடிருந்த வாழ்வும் வீழும்'' அதிவீரராம பாண்டியனரின் பொன்மொழி.

''சிவசிவ என்று சொல்லிவர தீவினை அகலும்'' என்றனர் திருமூலநாயனார்.

''ஈயார் தேட்டம் தீயார் கொள்வர்'' என்றார் ஔவைப்பிராட்டியார்.

இவர்கள் அருளிச் செய்த நெறிமுறையில், வழிகாட்டலில், உணர்ந்து வாழ்ந்த வாழும் மனிதர்கள் சிலர் இருக்கவே செய்கின்றார்கள். இத்தகைய

வர்கள் மனிதர்களில் மாணிக்கங்களாக மதிக்கப்படுகின்றார்கள்.

அமைதியான வாழ்வுக்கு அறிஞர்கள் போற்றும், நெறிகளை, ஒழுக்கசீலங்களைக் கவனிக்காமல் புறந்தள்ளிவிட்டு தாம் விரும்பிய வண்ணம் வாழும் மக்கள் உண்மைநெறி விளக்கம் அறியாமல், உணராமல் துன்பங்களைத் தேடி அணைத்துக் கொண்டு அழிவில் வீழ்ந்து படுகின்றார்கள். நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வங்களே ஆத்மஞானம் மற்றும் அனுபவ ஞான மொழிகளாக விளங்கி வருகின்றன

இன்றைய காலகட்டத்தில் மனிதன் அறிவியல் என்ற விஞ்ஞானத்தில் அதிவேகமாக முன்னேற்றங்கண்டு வருகின்றான். அறிவியல் கண்டு பிடிப்புக்களும் அவற்றால் ஏற்படும் ஆக்கங்களும் மனித வாழ்வில் பல வசதிகளை மேம்படுத்தி வருவது உண்மை தான் ஆனால் இந்த விஞ்ஞான அறிவின் புதிய கண்டுபிடிப்புக்கள் மானுடனுக்கு வாழ்க்கை வசதிகளை அள்ளித் தருவதுடன் நின்றுவிடாமல், மனிதனையும் மற்ற உயிர்களையும் அழித்தொழிக்கும் பல சாதனங்களையும் உருவாக்கி வருகின்றன. மனிதர்களை அழிக்கும் விஷ வாயுக்கள் விஷக்கிருமிகள், போராயுதசாதனங்கள் அணுக்கதிர் வீச்சுக் கருவிகள், அணுக்குண்டுகள் மற்றும் வெடிப்பொருட்கள் போன்ற அழிவைக் கொண்டு வரும் அநேக விஞ்ஞானக் கண்டு பிடிப்புக்கள் யாவும் அறிவியல் முன்னேற்றம் தந்து வரும் காரணியங்களாகும்.

இதைவிட அறிவியல் ஆராய்ச்சிகளால் ஏற்பட்டு வேகமாக விருத்தியடைந்து வரும் விவசாயம் மற்றும் தொழில் வளர்ச்சிகளினால். நாம் வாழும் பூமியின் சூழலில் அமைந்த நீரில், காற்றில் மண்ணில் ஆகாயத்தில். உணவுப் பொருட்களில் நச்சுக் கழிவுகள், விஷக் கிருமிகள், கெட்டவாயுக்கள், கலந்து மாசுபடுத்தி வருகின்றன. இவை எல்லாம் மனிதனுடைய நலவாழ்வுக்குத் தீங்கிழைக்கத் துவங்கிவிட்டன.

அறிவியல் வளர்ச்சியின் பெறுபேறாக இன்று எயிட்ஸ், டெங்கு, புளு, செப்ரிசீமியா போன்ற 30 பயங்கர புதிய நோய்கள் உருவாகிவிட்டன. இவற்றுக்கான மருந்துகள் இன்னும் சரியாகக் கண்டு பிடிக்க முடியவில்லை. இந்த நோய்கள் மனித சமுதாயத்தை படிப்படியாக அழிந்து வருகின்றன. இந்நாளில் உலகில் முன்னணி நாடுகளாக விளங்கி வரும் அமெரிக்கா, சீனா, ரஷ்யா, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் சில சிறிய நாடுகள் இந்தப் பூமியை முற்று முழுதாக அழித்து சாம்பர் மேடாக்கி விடக் கூடிய அணுக்குண்டுகள், விஷவாயுக்கள், போர்ச் சாதனங்கள்,

நச்சுக் கிருமிகள் மற்றும் எத்தனையோ அழிவு நாசக் கருவிகளை உற்பத்தி செய்து குவித்து வைத்துக் கொண்டிருக் கின்றன. இந்த நாடுகளில் சில வல்லரசுகள். உலகில் உள்ள சிறிய நாடுகளுக்கு பொருளா தார உதவிகள் என்ற போர்வை யில் பிரச்சினைகள், குழப்பங் களுக்குத் தூபம் போட்டு போர் களை உண்டாக்கி வருகின்றன அந்தப் போர்களுக்கு, வியாபார நோக்கில் போர் அழிவுச் சாத னங்கள் நேரடியாகவும் மறைமுக மாகவும் விற்பனை செய்துவருகின் றன. இந்தக் கருவிகள் போரில் கையாளப்படும் போது அப்பாவி மக்கள் பலியாவதுடன். சொத் துக்கள், இயற்கைச், செல் வங்கள் அழிக்கப்படுகின்றன. மனித வாழ்க்கையும் வீணில் நாசத்துக்குள்ளாகின்றது.

மனிதன் வாழப் பிறந்தவன் என்ற மனித நேயம் உணரப் படாமல் தாம் விரும்பிய வண்ணம் அழிவு வர்த்தகம் போய்க் கொண்டிருக்கின்றது. சர்வதேச வர்த்தக முதலைகள் மற்றும் அரசியல் லாபம் பெறும் அரசியல்வாதிகள், உலகளாவிய ரீதியில் கோடிக் கணக்கில் லாபம் பெறும் வியாபார முறை மையில் மனித இனத்தை அழிவு நாசம் செய்யும் அறிவியல் சாதனங்களை விற்றும் பரப்பியும் பயன்படுத்தியும் வருகின்றார்கள்.

இந்தப் பரிதாபகரமான நிலைமை மோசமாகி வருவது மனிதனுக்குத் துயரைத் தருகின் றது இது எப்போது மாறப் போகின்றது? இந்த அபாய மான, பயங்கர பகைப்புலம் மறைய வேண்டுமாயின் மனித னானவன் மனிதநேயம் என்ற புனிதமான குணநலன்களுடன் செயற்பட வேண்டும். மனிதாபி மானம், மனிதநேயம் இரண்டும் மனிதனுடைய வாழ்வில் உள் ளார்ந்தமாக மலர வேண்டும்.

உலக வாழ்வில் நிம்மதியையும் அமைதியையும் தரக்கூடிய உண்மைகள், தர்மங்கள், நீதி, கருணை, பரிவிரக்கம், ஈகை, போன்ற தெய்வக்குண சீலங்கள் மக்களின் வாழ்க்கையில் புரிந் துணரப்பட்டுப் பின்பற்றப்பட வேண்டியது மிகவும் அவசிய மாகின்றது.

உலகில் இன்றும் என்றும் நல்வழி காட்டும் சமயநெறிகள் வளர்க்கும் மதப் பெரியார்கள் ஆன்மீகர்கள், ஞானிகள் போன்ற பெருமக்கள் இன்றைய உலகம் அழிவை நோக்கிப் பயணஞ் செய்யும் நிலைமையை மக்களுக்கு உணர்த்தும் செயற் பாடுகள் விரைவுபடவேண்டும். மேலும் காலங்காலமாக மக்களை வழிப்படுத்தி ஆளப் போகும் அர சியல் மனிதர்களின் செயல்களில் மனித வாழ்வின் மகத்துதம் மற்றும் மனித நேயம் மதிக்கப் பட்டு உணரப்படுதல் வேண்டும். மனித உயிர்களை மதித்துப் பாது காக்கும் நிலைமை தோன்ற வேண்டும்.

மானுடர்கள் எந்தத் தேசத்தில்வாழ்ந்தாலும் பிறப்பினுல் அவர்கள் மனித இனத்தவர் என்ற உயரிய கருத்து முக்கியத்துவம் பெற வேண்டும். மனிதர்களிடையே அன்புணர்வு வளரும் போது, நிறம், இனம், தேசம், மொழி, மதம், போன்ற பேதங்கள் முனைப்புப் பெற முடியாது. இன, மொழி, மத, கலாச்சார அடிப்படையில் வாதப் பிரதி வாதங்கள் கருத்து வேற்றுமைகள், அழிவு வேலைகள் கலவரங்கள் உண்டாக்கப்படுதல் சிறுமைச் குணம் கொண்ட மனித விரோதச் செயலாகும். இப்படியான செயல்களால் மனிதர்களிடையே முட்டி மோதிக் கேவலப்படும் மிருகக் குணம் தோன்றி வளர்கின்றது. பல நாடுகளில், குழப்பம், கலகம் வன்முறைகள், அழிவுச் செயற்பாடுகள், நாசப் போர் முறைகள் உருவாக்கப்பட்டு நடப்பதன் காரணம் யாது? இவை மனித ஜென்மத்தையும் உயிர் வாழ்வின் ஒப்பற்ற பெறுமதியையும் தூசாக மதித்துச் செயல்படும் அரசியல் கோமாளிகளால் அப்பாவி மனித ஜீவன்கள் பலியாகி வருகின்றன. அகதிகளாகி, அபலைகளாகின்றனர். அவர்களின் வாழ்வுக் குடியிருப்புக்கள், வாழ்வுச் செல்வங்கள் நர்சமாகி வருகின்றன. மக்களின் உயிர் வாழும் உரிமைக்கு உத்தரவாதமில்லாத அரசியல் நடைமுறை ஏற்றுக் கொள்ள முடியாது. எந்த வொரு இன சமுதாயத்துக்கும் சந்ததி, வரலாறு, பிரதேசம், மொழி பண்பாடு, கலாச்சாரம் பாரம்பரிய அரசியல் உரிமைகள் காலங்காலமாக இருந்து வருகின்றன. அவை மதிக்கப் பட்டு பாதுகாக்கப்படுவது நல்ல அரசியலாகும்

இன்று பல நாடுகளில் வரலாற்றுச் சிறப்புப் பின்னணி கொண்ட புகழ் பெற்ற இனங்களின் தார்மீக உரிமைகள், வாழ்வுரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன. இன்றைய உலகில் மனித சமுதாயங்கள் அழிவுக்கும் உணவு பஞ்சத்துக்கும் பற்றுக் குறைக்கும் நோய்களுக்கும் நிம்மதியைக் குலைக்கும் சூழ்நிலைக்கும் தள்ளப்பட்டு வருவது கெட்ட நோக்கத்துடன் செயற்படும் அரசியல் அதிகாரம் படைத்தவர்களால் ஏற்படுத்தப் படுவது மறுக்கமுடியாததாகும்.

இன்று ஜனநாயக நாடுகளில் போர்களும் அழிவுகளும் நடைபெறுவதென்றால் இவற்றுக்கு மக்கள் வாக்கின் மூலம் அளித்த அதிகாரங்கள் தவறான போக்கில் செல்வதைக் காணலாம். நாட்டில் ஒற்றுமை சமாதான மனித வாழ்வு மலர்ந்து சுகந்தர வேண்டுமென்றால் ஜனநாயக நாடுகளில் மக்கள் மனித நேயத்துடன் மனிதவாழ்வைப் பேணி உய்விக்கக் கூடிய நேர்மையான அரசியல் மனிதர்களுக்கு தேர்தல்களில் வாக்கை தாங்கள் அளிக்கும் விசயத்தில் கவன

மெடுக்க வேண்டும். நாட்டை யும் மக்களையும் மதிக்காத பிரதி நிதிகளை மக்கள் ஏன் தேர்ந் தெடுக்க வேண்டும்? இது விச யத்தில் மக்களின் சிந்தனை மாற் றம் பெற வேண்டும்.

மக்கள் நிம்மதியாக வாழ மதப் பெரியவர்கள், மற்றும் அறிவாளி கள், ஆத்மஞானிகள், நல்ல நூல் க ள், இதழ்கள் வழிகாட்ட வேண்டும். கல்வி அறிவு மற்றும் உலகளாவிய செய்தி அறிவுகள் வேகமாக வளர்ந்துவரும் நவயு கத்தில் பொதுமக்கள் விழிப்பாக இருந்து செயற்பட்டால் தான் அவர்களுடைய உயிர் வாழ்வு க்கு பாதுகாப்புக் கிடைக்கும்.

பல இனம் மொழி பண் பாட்டுச் கலாச்சாரச் சமு தாயங்கள் நிம்மதியாக உரிமை யோடும் பெருமையோடும் வாழ மனித உயிர்களை மதிக்கும் மனித நேயங் கொண்ட அரசியல் நிர்வாகங்கள் தேசங்கள் எல் லாம் தோன்ற வேண்டும். அப் போது தான் உலகம் உய்வடைய வழிபிறக்கும்

ஆ. ச. லிங்கம்

## தமிழர் வாழும் தென்னாபிரிக்காவில் சில கசப்பான உண்மைகள்

எங்கள் நாடு கறுப்பர் ஆட்சிக்கு வந்ததிலிருந்து மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. எல்லாம் கறுப்பர் கையில் இருக்கின்றது. கொலை, களவு, வழிப்பறி, அன்றாட நிகழ்ச்சி யாக உள்ளது. நமது மக்கள் அதிகமாகப் பாதிக்கப் படுகின் றார்கள். இந்த நாடு நீர் வளம், நிலவளம், மலைவளம், பயிர் வளம் உள்ள நாடு பொன்னும், வைரமும், நிறைந்த நாடு இங்குள்ள கறுப்பர் எல்லாவற்றையும் அவர்களுக்கே பெற விரும்புகிறார்கள். நெல்சன் மண்டேலா தன்னுடைய இனத்தைப் பற்றித்தான் அதிகமாக அக்கறை கொள்கிறார் அரசாங்கத்தில் ஊழல்கள் நடைபெறுகின்றன. இப்படியாக எமது தென்னா பிரிக்காவின் இன்றைய நிலையைக் குறிப்பிடலாம்.

தமிழ்த் திரு. மு. அன்பன்
டர்பன் தென்னாபிரிக்கா

# தனிமாண்புடையது திருக்குறளே

இனி உலகில் எவரும் கண்டு இயம்பிடவே முடியாத இனிமை மிக்க தமிழ் மறையே திருக்குறளாகும். இப்போற்று தல் இன்று நேற்று தொடங்கியதல்ல. திருக்குறள் தொடங்கிய காலந்தொட்டு, இன்று வரை வாழ்ந்த அறிஞர் பெருமக்கள் திருக்குறளை தமிழ் வேதம் எனவும் தமிழ் மறையெனவும் போற்றி யுள்ளனர் இப்பூவுலகில் மக்கள் இனம் வாழும் காலம் முழுவதும் திருக்குறள் தமிழ் மறையென போற்றப்படும். 'பொய்யில் புலவன் பொருளுரை' என மணிமேகலை திருக்குறளின் உயர்வை உரைத் துள்ளது. 'தொல்லுலகில் எழுதுண்ட மறையன்றோ' என்று கம்பர் திருக்குறளை 'மறை' என்று குறிப்பிட்டார் 'மெய் வைத்த சொல்' என்று திருவள்ளுவருடைய திருவாக்கை உமாபதி சிவம் போற்றியுள்ளார்.

திருக்குறளே தமிழரின் மறை, தமிழ் மறையென்று கொள் ளும் வழக்குப் பல காலந்தொட்டு நிலைத்து வந்துள்ளதெனினும் திருக்குறளை தமிழ் மறையாக எல்லாத் தமிழரும் ஏற்றிப் போற்றி அதனை வழித்துணையாக வாழும் வழியைக் காட்டும் மறை நூலாக கொள்ளவில்லை

இது ஏன்? தமிழ் மக்களாகிய நாம் ஆழ்ந்து கருத்தூன்றி சிந்திக்க வேண்டும்.

திருக்குறள், முப்பானூல், உத்தரவேதம், தெய்வநூல், திருவள்ளுவர், பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தமிழ் மறை, பொதுமறை, என்று பலபெயர்களாலும் அழைக்கப் படுவது திருக்குறளையே குறித்துநிற்கின்றது. இதே போன்று திருவள்ளுவரின் நாமங்களும், நாயனர், தேவர், முதக்காவலர் தெய்வப்புலவர், நான்முகனர், மாதானுபாங்கி, செந்நாப் போதர், பெருநாவலர் என்று அழைக்கப்படுகின்றார்.

தெய்வப்புலமை வாய்ந்த திருக்குறள் உலகளாவிய ரீதியில் பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டு நடைமுறையில் பல இன மொழிபேசும் மக்களால் கையாளப்பட்டு வரும், இவ் வேளையில். நாம் அதன் கருத்தாழமிக்க தத்துவத்தை உணர்ந்த பாடில்லை திருக்குறளையே தாரக மந்திரமாகக் கொண்டு

வாழ்ந்து வாழுகின்ற சில அரிய மனிதர்கள் இன்னும் இருக்கத் தான் செய்கின்றார்கள், வியாபார நோக்கமாக கொள்ளாது தமிழ் மொழியை விலைபேசி விற்காத மனிதப்பிறவிகளும் இல்லாமலில்லை.

அந்த வகையில் காணக்கூடியவர்களில் விநாயகர் தரும நிதிய நிறுவனர் தேசாபிமானி ஆ.சி.மு அவர்கள் சுயநலம் கருதாது, புகழ்ச்சியை விரும்பாது தனிமனிதனாத நின்று திருக்குறளுக்கு ஆற்றும் பணியும், திருக்குறளின் அடிப்படையில் நின்று மனிதநேயத்துடன் தமிழ் மொழிக்கு செய்யும் தொண்டும் பல வகைகளாலும் பாராட்டப்படவேண்டியதாகும் அதே போன்று தேசாபிமானி மில்க்வைற் அதிபர் கனகராசா திருக்குறளுக்கு ஆற்றும் பணியும் மகத்தானது. உலகத் தமிழ்ப் பண்பாட்டியக்கத்தின் எமது தலைவர் மலேசிய R. N. வீரப்பன் அவர்கள் உலகளாவிய ரீதியில் திருக்குறளை பரப்பும் நோக்குடன் தமிழுக்காக, தமிழ் இனத்திற்காக அயராது ஆற்றும் பணிக்கு எமது பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் தோளோடுதோள் நின்று அவருக்கு எப்போதும் எமது ஆதரவை கொடுப்போமென உறுதி செய்வோமாக.

உண்டு, உறங்கி, வாழ்வதே நோக்கமாக கொள்ளாது மனிதநேய அடிப்படையில் பணபலம் படைத்தோர் நல்ல செயல்களுக்கு உதவுவார்களாயின் வருங்கால சரித்திரத்தில் மக்கள் மனதில் இடம் பெறுவர் என்பதில் ஐயமில்லை.

ஓம் சாந்தி

அருள் நெறித் தொண்டர்
**பருத்தியூர் சிவ. ஆறுமுகசாமி J. P**

---

# மதம் என்றால் என்ன?

மதம், சமயம் என்பது மகாசக்தியாக விளங்கும் இறைவனுக்கு மதிப்பளித்து பயபக்தியுடன் தர்மமான வழிகளில் உயிர்களையும் மனிதனையும் நேசிக்கவும் மனிதனை மனிதன் மதித்து வாழவும் நன்நெறிகள் தந்து வழிகாட்டும் ஊடகமாகும்.

# இந்தியத் தமிழகத்தில் தமிழர் நிலை

இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களிலும் உள்ள தமிழ் மக்களின் தொகை 6½ கோடியாகும். இவர்கள் அனைவரும் தமிழைப் பேசத் தெரியாதவர்கள். இவர்களில் தமிழ் மொழியை எழுதவும் வாசிக்கவும் தெரிந்தவர்களாக 4½ கோடியினரைக் குறிப்பிடலாம். தமிழர்களில் அரைக் கோடியினர் உயர் கல்வியாளர்களாய் விளங்குகின்றார்கள் இந்தியாவிலே 02 கோடித் தமிழர்கள் தமிழை வாசிக்கவும் எழுதவும் தெரியாதவர்களாய் உள்ளார்கள்.

தமிழ் மொழியைக் கற்பிக்கும் கல்வி நிலையங்களில் மொத்த எண்ணிக்கையை இருபதினாயிரமாய் கணக்கிடலாம் தமிழகத்தில் ஆறு கோடி தமிழர்கள் வாழ்கிறார்கள். தமிழ் ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழியாகவும் உள்ளது. உயர்த்திக் கூறுமளவுக்கு இன்னும் ஆட்சி மொழியான தமிழும் பயிற்சி மொழியான தமிழும் உச்சநிலை அடைய வேண்டியுள்ளது. தமிழ் மக்களின் வறுமைக்கோடு நீண்டு கொண்டேயிருக்கிறது. அறுபது விழுக்காட்டினர் வறுமை நிலையினராகவே உள்ளார்கள். நூற்றுக்கு மேற்பட்ட நாள், வார, மாத இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

தமிழ்ப்பண்பாடு அழியாமல் காப்பாற்றப்படுவதே தமிழரை இனங்கான வைக்கும் சீரிய செயலாகும்.

**பேராசிரியர். கதிர் முத்தையன்**
உ. த. ப. இ. கடலூர், இந்தியா

# கனடா மகாநாட்டுச் செய்தியில்

அனைத்துலகத் தமிழர்களிடையே மொழி பண்பாட்டு ரீதியில் ஓர் ஒருங்கிணைப்பை உருவாக்கவும் கனடா வாழ் பல லட்சம் தமிழர்களை தாய்த் தமிழ் உணர்வுக்குள் கொண்டு வரவும் புலம் பெயர்ந்து வாழ்ந்து வரும் நம்மவர்களின் நேர்த்தியை ஊருக்கு உணர்த்துவதுடன் நமது மக்களின் மனதிலும் வேரூன்றும் வண்ணம் செய்யவும் இம்மகாநாடு பயன் விளைக்கட்டும்.

தமிழ்ப்பணிச் செம்மல்
**கே. ரி கணேசலிங்கம்**
உ. த ப இன் ஐரோப்பிய அமைப்பாளர்
நீனே, ஜேர்மனி

# 2000 ஆண்டில் உலகம் அழியுமா?

''சமுத்திரன்''

இரண்டாயிரமாவது ஆண்டுப் பிறப்பை நோக்கி நாம் நடைபோடுகின்றோம். இந்த 2000மாவது ஆண்டில் உலகம் அழியப் போகின்ற விடயங்கள் ஊகமாகவும் செய்திகளாகவும் பத்திரிகைகளில் பரக்கப் பேசப் பட்டு வருகின்றது. இன்று உலகம் அழிவை நோக்கிப் பயணஞ் செய்வதை எம்மால் ஓரளவுக்கு உணரமுடிகிறது. உலகத்தையும் உயிர்களையும் அழிக்கும் அறிவியல் ஆக்கங்களை மனிதன் செய்து கொண்டிருக்கின்றான். பெரிய அளவில் பூமியில் அழிவு நாசங்கள் ஏற்பட அதிகமான வாய்ப்புக்கள் இன்று ஏற்பட்டு விட்டன. யுகம் முடிந்து அடுத்த யுகம் தோன்றும் சந்திகளில் அழிவு ஏற்பட்டு வருவதை சோதிடக் கலைமூலம் அறியமுடிகின்றது. 60 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஏலவே நடந்துபோன நிகழ்வுகள் திரும்பவும் அதே போல அல்லது சற்றே மாறுபாடான முறையில் ஏற்பட்டு வருகின்றன. விஞ்ஞான வளர்ச்சியினுல் உலகத்தைப் பெருநாசம் செய்யக்கூடிய பயங்கர ஆயுதங்கள் மற்றும் சாதனங்கள் உருவாக்கப்பட்டுவிட்டன. இவற்றைப் பயன்படுத்துப்போது உலகம் எந்த வேளையிலும் அழியலாம். சில மணி நேரத்தில் கோடிக்கணக்கான மக்கள் அழிவைச் சந்திக்கமுடியும். நினைத்த நேரத்தில் உலகப்போரை ஆரம்பித்து விட இன்று பெரிய நாடுகளால் இயலும் நிலையுள்ளது. புதிதான நோய் நலிகள் மனித சமுதாயத்துக்கு தீங்கிழைத்து வருகின்றன். பூமியை வெப்பத்திலிருந்து பாதுகாத்து வரும் உயிர்வளி ஓசோன் அயனிமண்டலத்தில் தொழிற்சாலைக்கழிவு வாயுக்களால் துவர்ரங்கள் ஏற்பட்டுவிட்டன. இதனுல் பூமியின் சிலபாகங்களில் வெப்பம் அதிகமாகி வருகின்றது. இந்த வெப்பம் தென்துருவ அன்டாட்டிக்காப் பனிக்கண்டத்தை தாக்கும் போது பனிப்பாறைகள் உருகி வெள்ளப் பிரளயம் தோன்றி உலகை நீரில் ஆழ்த்தி அழிக்கமுடியும். என்றுமில்லாதவாறு இன்று உலகில் புயல், பெருமழை, வெள்ளப்பெருக்கு, பூகெம்பம் படிப்படியாகத் தலைகாட்டி அநர்த்தம் புரிந்து வருகின்றன வானவெளியில் வலம் வந்து கொண்டிருக்கும் பெரிய உருக்கள் மற்றும் வால்வெள்ளிகள் பூமியுடன் எந்தச்சந்தர்ப்பத்திலும் மோதிவிடக்கூடிய ஆபத்துக்களும் இருக்கவே செய்கின்றன.

நமது இந்த உலகத்தில் இருக்கும் சிறிய பெரிய நாடுகள் முழு உலகையும் அழித்துவிடும் அணுஆயுதங்களைத் தயாரித்து நிலத்தில் புதைத்து வைத்துள்ளன. இவை எல்லாம் இந்த உலகம் வாழ வேண்டுமென்ற சிந்தனையிலா நடக்கின்றன. இந்நாளில், நீதி, நியாயம், அன்பு மற்றும் வாழ்வியல் அறங்களை மனிதன் உணராமல் மறந்து விலங்குபோல் செயல் படுகின்றான்.

உலகத்தில் அழிவுகள் தோன்றும்போது அன்பும் தர்ம காரியங்களும் வாழ்ந்து கொண்டிருக்கும் தேசங்களை நிச்சயமாகக் கடவுள் சக்தி காப்பாற்றுமென்பது உண்மை.

''ஆணவம் அகந்தை இரண்டும்
மனிதகுலத்தை அழித்து விடும்''

# தமிழர்களென்றால் அகதிகளா?

**தமிழரசன்**

இலங்கையில் வடக்குக்கிழக்கு மாகாணங்களில் தமிழீழப் போர் நடந்து கொண்டிருக்கின்றது. இதனால் தமிழ் மக்கள் மாறிமாறி இடம் பெயர்வதும், அகதிகளாகி அல்லல் படுவதும் நாளாந்த விதியாகிவிட்டது. இவர்கள் எல்லாத் துன்பதுயரங்களையும், அவலங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். உணவுப் பஞ்சம், நோய்கள், பற்றுக்குறைகள் மருத்துவ வசதியீனங்கள் மற்றும் அடிப்படை வாழ்வியல் ஆதாரங்கள் கிடைக்காமை, சீரழிவுகள், அவமானங்கள் போன்ற விடயங்கள் அவர்களை ஆட்டிப் படைக்கின்றன. நாட்டில் செங்கோல் முறைமை சரிந்துவிட்டது. போர்கள் முடிவதால் நிம்மதி ஏற்படும். நல்லிணக்க பேச்சுக்களால் உரிமை வாழ்வு மலர வேண்டுமென்பதை எதிர்பார்த்து தமிழ் மக்கள் காத்திருக்கின்றார்கள்.

''என்று தணியும் இந்த சுதந்திர தாகம்
என்று மடியும் இந்த அடிமையின் மோகம்''

**சுப்பிரமணிய பாரதியார்**

# பிரான்சில் தமிழர் நிலை

பிரான்சில் வாழும் ஆறு கோடி மக்களில் தமிழர்கள் சுமார் ஒரு லட்சம் என்று கணக்கிடலாம். இவர்களில் தமிழ் பேசத் தெரியாதவர்கள் 95 ஆயிரமாக எண்ணலாம். தமிழ் எழுதவும் வாசிக்கவும் தெரிந்தவர்கள் சுமார் எண்பதினாயிரம் தமிழ் உயர் கல்வி கற்றவர்களின் தொகை பத்தாயிரமாகும். தமிழை எழுதவும் வாசிக்கவும் தெரிந்தவர்கள் 15 ஆயிரமாவர்

பிரான்சில் தமிழ்மொழிக்கு உரிய அந்தஸ்து இல்லை தமிழர்கள் பொருளாதார நிலையில் பின் தங்கியிருக்கிறார்கள். இங்கே தமிழர்கள் தமிழ்ப்பண்பாட்டுக் கலை கலாச்சார நிகழ்ச்சிகள் நடாத்திவருவதன் மூலம் எம்மை அடையாளம் காட்டிக் கொள்கின்றோம் எங்களிடையே இரண்டு வழிபாட்டுத் தலங்கள் உள்ளன. தமிழ் இதழ்கள் நான்கு வெளியாகிக் கொண்டிருக்கின்றன. நமது தமிழ்ப் பண்பபட்டைப் பேணவும் வளர்க்கவும் முடிந்த அளவிலே முயற்சிகளை மேற்கொள்கின்றோம்.

பி. சண்முகசுந்தரம்
தலைவர் உ. த. ப. இ
பிரான்ஸ் கிளை
(கனடா மலரில் இருந்து)

---

# மலேசியாவில் திருக்குறள்

மலேசிய நாட்டில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் திருக்குறள் வாழ்வியல் நெறிமுறைகள் வேகமாகப் பரவி வருகிறன. அங்கே தமிழர்களில் அநேகர் திருக்குறள் கருத்துக்களை உண்மையான வாழ்க்கை முறையாகப் பின்பற்ற துவங்கியுள்ளார்கள். அவர்களின் விசேட தினங்கள், நிகழ்வுகள் மற்றும் பொது நிகழ்ச்சிகள், தனிப்பட்ட இல்லச்சிறப்பு நிகழ்வுகள் யாவற்றிலும் திருக்குறள் பாக்கள் பாடப்பட்டு வருகின்றன. வான்மறை தந்த வாழ்க்கைச் சீலங்களை வளர்க்கும், பரப்பும் தார்மீகப் பணிகளில் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் தலைமையகம், உ. த. ப. இ, மலேசியக்கிளை தமிழ் இலக்கியக்கழகம், மற்றும் சில கழங்கள் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றன என்பதை விசேடமாகக் குறிப்பிடலாம்.

எஸ். அன்பழகன்
மலேசியா

# கற்பும் களவும்

## (ஐந்திணை எனப்படும் அன்புத் தமிழ்மணம்)

உலகின் மொழிகளுட்டனிச் சிறப்புடன் மிளிரும் தன்மை தமிழ்மொழிக் குண்டென் பதற்கு ஆதாரம், வேறு எந்த மொழிக்குமில்லாத பொருளிலக் கணத்தைத் தன்னகத்தே கொண்டு விளங்குவதேயாகும். சங்ககால நூலாகிய தொல்காப் பியத்தில் பொருளதிகாரத்தில் மிகவும் அழகான முறையில் பொருளிலக்கணம் விளக்கப்பட் டுள்ளது. அவற்றுட் சிலவற்றை நோக்குவாம்.

''பெருமையும், உரனும் ஆடூஉமேன'' என்பதில் அறிவு டையவனாகவும் உரனெனும் பண்புடையவனாகவும் இருப் பது ஆண்களுக்கான இலக்கணம் எனத் தொல்காப்பியர் வகுத் துக் கூறுகின்றார்

''அச்சமும், நாணும், மட னும் முந்நுறுதல் நிச்சமும் பெண்பாற்குரிய என்று பெண் களுக்கும் இலக்கணம் கூறியிருக் கின்றார். இவையின்றேற் பெண் களாகக் கருதப்படமாட் டார்கள்.

''வேட்கை, ஒருதலை, உள் ளுதல், மெலிதல், ஆக்கம், செப்பல், நாணுவரை இறத்தல் நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம் சாக்காடு என்றிச் சிறப்புடை மரபினவை களவென மொழிப'' என்று களவின் இலக்கணம் விரிகின்றது. களவு காதலைக் குறிக்கின்றது.

கற்பு மணம் பற்றி விளக் கிக் கூற முற்பட்ட புலவர், சடங்குகளோடு சேர்ந்து, பெண்ணை அடைவதற்குரிய மரபினையுடைய தலைவன், அப்படியான மரபினையுடைய தலைவியை, கொடுத்தற்குரிய பெண்ணின் உறவினர் மணஞ் செய்து கொடுக்க மணந்து கொள்வது என்று கூறியதுடன் தலைவி, தலைவனுடன் ஒரு மித்து உடன் போக்கிற் செல் லும் பொழுது, கொடுப் போரின்றியும், சடங்கு முறை களுடன் திருமணம் செய்து கொள்வதுமுண்டு என்றும் கூறி யுள்ளார்.

தமிழகத்தில் மிகப் பழங் காலந்தொட்டே களவு என்னும் காதல் மணம் நிகழ்ந்து வந்தி ருக்கிறது. குறிப்பிட்ட ஒரு காலத்தில்தான் கற்பு மணம் எனும், சடங்கு முறைகளை யுடைய (கரணம்) மணம் வகுக் கப்பட்டிருக்கிறது. இதனைத் தொல்காப்பியனார் ''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்

ஐயர் யாத்தனர் கரணம்'' என்று கூறியிருப்பதனால் நாம் அறிந்து கொள்ள முடிகிறது. கற்பு மணம் என்ற கரண முறை யானது நாட்டிலே ஏற்பட்ட தற்கு நாட்டு மக்களிடையே பொய் கூறல், குற்றமான வழி களில் ஒழுகுதல், ஆகியன நிகழத் தொடங்கியமையே காரண மாகும் தமிழகத்தில் இத்தகைய மணவினை ஏற்படுத்தப்படு வதற்குப் பன்னெடுங் காலத் திற்கு முன்னரேயே, எவ்வள வோ சிறந்த பண்பாட்டுடனும் ஒழுக்கத்துடனும் மக்கள் தமது வாழ்க்கையை நடாத்தியிருக் கின்றார்கள் என்பது இதி லிருந்து புலனாகின்றதல்லவா? மிகப் பழங்காலத்தில் தமிழகத் தில் சடங்குகளற்ற மணம் நடை பெற்றுக் கொண்டிருந்த காலை யில் அயல் மாநிலங்களில், மறையவர் வகுத்த மண முறைகள் நடைபெற்று வந்திருக் கின்றன. ''மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள், துறையமை நல்யாழ்த் துணைமையோர்'' இயல்பாகிய காந்திருவத் திருமணந்தான் பழந்தமிழ்க் காதல் மணத்துடன் ஒப்பிட்டுக் கூறப்படக் கூடியது என்று கூறுவர். 'பிரமம், பிரசாபத் தியம், ஆரிடம், தெய்வம், காந் திருவம், அசுரம், இராக்கதம், பைசாசம்' என்னும் எட்டு வகை யான மணமுறைகள் வட நாட்டிலே நிகழ்ந்து கொண்டிருந் தன. இவற்றுள் யாழிசை வல் லவர்களாக விளங்கிடுவோர். இன்பம் துய்ப்பதற்காக ஒருவரை யொருவர் கண்டின்புற்று உடன் போக்கிற் சென்று, மணந்து கொள்வதனைக் 'காந்திருவம்' எனக் கூறியிருக்கின்றார்கள். அத்துடன் ஒப்பிடக் கூடியதான 'களவியல்' தான் தமிழ் நாட் டின் பழம் பெருமை மிக்க மண வாழ்க்கையாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது என்பது தெளி வாம்.

**மதிவாணர் - செ. மதுசூதனன்**

---

# நூல்கள், ஏடுகள், இதழ்கள்

உலகளாவிய ரீதியில் வெளிவிடப்பட்டு வரும் தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள், பிரசுரங்கள் மற்றும் இதழ்கள் சஞ்சிகைகள் போன்றனவற்றை ஆர்வமும் வசதியும் வாய்ப் பும் உள்ள அன்பர்களை எமக்கு அனுப்பியுதவும் வண்ணம் பணிவன்புடன் கேட்கின்றோம்.

நன்றி

**ஆசிரியர் உ. த. குரல்**

# இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்

### கண - ஜீவகாருண்யம்

இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்களே என்பதற்கு அனேக வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. இலங்கை என்பதற்கு ''ஆற்றிடை முறிப்பு'' என்ற கருத்து அகராதியில் காணப்படு கின்றது. பௌறுளி ஆறும், குமரி ஆறும் பெருக்கெடுத்து ஓடும் பொழுது இடையில் நிலப்பரப்பாக அமைந்த இடம் கபாட புரம் என்றும், அந்தக் கபாடபுரம்தான் இலங்கை என்றும் இங்கு முதற்சங்கம், இடைச்சங்கம் கடைச்சங்கங்களில் ஒன்று இருந்துள்ளது என்றும் வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளனர். இலங்கை இந்தியாவுடன் இணைந்து இந்திய பெரு நிலப்பரப் பாக இருந்தபோது வடநாட்டில் ஏற்பட்ட படை எடுப்புக்களால் அங்கு வாழ்ந்த திராவிட இனத்தைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் தெற்கு நோக்கி இடம் பெயர்ந்து தற்போது இலங்கை அமைந் துள்ள இந்திய பெரு நிலப்பரப்பில் தங்களுடைய அறிவுப் பொக்கிசங்களை சேமித்து பக்குவப்படுத்தி வைத்தனர் என்ப தற்கு ஆதாரங்கள் உள்ளன.

ஆதிக்குடிகள் பற்றிய வரலாற்றைக் கூறும் இலங்கைப் பழங்கால பாளி மொழியில் எழுதப்பட்ட நூல்களான மகா வம்சம், தீபவம்சம் ஆகியவற்றில் கூட தமிழர் வரலாறு பற்றிய ஆவணங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. மகாவம்சத்தில் விஜயன் இலங்கை வந்தபோது இயக்கர், சாளுவர் என்ற இரண்டு இன மக்கள் வாழ்ந்தார்கள் என்று கூறப்படுகின்றது. இவர்கள் திராவிட இனத்தைச் சேர்ந்த தமிழ் மக்களாவர். 'சீகள'' என்ற சொல் மகாவம்சத்தில் இரண்டு இடங்களிலும் தீபவம் சத்தில் ஒரு இடத்திலும் வருகின்றது. இந்த ''சீகள'' என்ற சொல் ''ஈழ'' என்பதிலிருந்து வந்தது என்பதை ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக பேராசிரியர் ''பரோ'' என்பவர் நிரூபித்துக் கூறியுள்ளார். மகாவம்சத்தில் கூறப்பட்ட இயக்கர், சாளுவர், தமிழர்களின் மூதாதையர் என்று வழங்கப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட பிராமிய கல்வெட்டு ஒன்றில் 'பெருமகன்' என்று எழுதப்பட்டுள்ளது, இந்தச் சொல் 'பெருமகன்' என்று

சங்க இலங்கியங்களில் காணப்படுகின்ற சொல்லுக்கு முற்பட்ட காலத்தைக் கொண்ட வரலாற்றை உடையது. எனவே இலங்கைத் தமிழ்மொழி வரலாறு காலங் கடந்தது.

கற்காலம் பெருங்கற்காலம் தொடக்கம் கிராமிய கல்வெட்டுகள் காலம் வரை இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்து வந்ததற்கான சான்றுகள் நிறைய இருக்கின்றன. இலங்கை முழுவதிலும் கிடைக்கப்பெற்ற சான்றுகளில் இருந்து ஆதியில் இங்கு வாழ்ந்தவர்கள் தமிழர்கள் தான் என்று அறியக்கூடியதாக இருக்கின்றது. காரைநகர், வேலணை, ஆனைக்கோட்டை, கந்தரோடை, பூனகரி, மண்ணித்தலை, அநுராதபுரம், பொலநறுவை, புத்தளம், காலி கண்டி ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட புராதன சின்னங்களும், பிராமிய கல்வெட்டுகளும் இதற்குச் சான்றுகளாக விளங்குகின்றன. சிந்து வெளியில் நாகரீகமடைந்த மக்கள் எப்படி வாழ்ந்தார்களோ அப்படியான நிலையில் ஈழநாட்டிலும் தமிழர்கள் வாழ்ந்து இருக்கின்றார்கள்.

இலங்கை இந்திய உபகண்டத்துடன் சேர்ந்து ஒரே நிலப்பரப்பாக இருந்திருந்தால் இங்கு பௌத்த மதமும் இருந்திருக்காது. சிங்கள மொழியும் இருந்திருக்காது. தமிழர்கள் மட்டுமே வாழ்ந்து கொண்டிருப்பார்கள். எனவே இலங்கையின் ஆதிக்குடிகள் தமிழர்களே. இதில் எந்தவித சந்தேகமுமில்லை.

---

# இரு கட்சி உடன்பாடு

இலங்கையை மாறிமாறி ஆட்சி செய்து வரும் இருகட்சிகள் உள்ளன இவை மக்கள் மத்தியில் பிரபலமானவை. எதிரும் புதிருமாகச் செயற்பட்டு வரும் இன்றைய எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக்கட்சி (யு. என். பி) மற்றும் ஆளும் பொது ஜன ஐக்கிய முன்னணியில் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சி (எஸ் எல் எப். பி) ஆகிய இரு கட்சிகளிடையே தமிழர் இனப்பிரச்சினையைக் கையாளும் பேச்சுவார்த்தை விசயங்களில் எந்தச் சமயத்திலும் ஒன்றையொன்று எதிர்ப்பதில்லை என்றவொரு உடன்பாடு சமீபத்தில் ஏற்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையை ஏற்படுத்தும் விடயத்தில் முன்னாள் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் லயம் பொக்ஸ் என்பார் மிகவும் ஈடுபட்டுழைத்துள்ளார்.

# ஈழக்காந்தி சா. ஜே. வே. செல்வநாயகம் (செல்வா)

இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியமான அசைக்க முடியாத இடத்தைப் பெறறுள்ளவர் தந்தை செல்வா அவர்களாவர். இவர் அஹிம்சை வழியில் நம்பிக்கை வைத்து அரசியலை நடாத்தியவர். 1948ஆம் ஆண்டிலிருந்து 30 ஆண்டுகள் தமிழ் மக்களின் உரிமைக்காக சாத்வீக வழியில் போராடி வந்தவர். இதனால் இவர் மூதறிஞர் என்றும் ஈழத்துக் காந்தி என்றும் மதிக்கப்பட்டவர். அரசியலில் நேர்மையும், தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் அரசியல் நடவடிக்கைகளில் கண்ணும் கருத்துமாகவும் இருந்தவர் இவருடைய 100வது ஆண்டு விழா சென்ற ஏப்பிரல் மாதம் இறுதி துவக்கம் இலங்கையில் பல இடங்களில் கொண்டாடப்பட்டு வருகின்றது தந்தை செல்வா அவர்கள் நேர்மை, கண்ணியம் மிச்கவர் மக்கள்மேல் அன்பும் அபிமானமும் கொண்டு வாழ்ந்தவர். இவரின் ஒப்பற்ற அரசியல் நேர்மை, தீர்க்கதரிசனத்தை மதித்து இன, மத, மொழி பேதமற்ற முறையில் அறிஞர்கள் புகழாரம் சூட்டி வருகின்றார்கள். இவரின் சாத்விக அரசியல் போராட்டங்களை கடந்த கால அரசாங்கங்கள் மதிப்புக் கொடுக்காததால், எழுபதுகளிலிருந்து தமிழர் உரிமைப் போராட்டங்கள் வன்முறைக்குத் தள்ளப்பட்டு இன்று பெரும் யுத்தமாக பரிமாணம் பெற்றுவிட்டன, என்பது மறுக்க முடியாத உண்மையாகும். உண்மையும் நேர்மையும் மனித நேயமும் கொண்டமையும் அரசியல் சமாதானத்தை உண்டுபண்ணும் என்றால் மிகையாகாது.

(தமிழன்பன், யாழ். நகர்)

---

## நாகதீவு

இலங்கைக்குச் சில வேறு பெயர்கள் உள்ளன. ஈழம், தப்ரபேன், சிலோன், இலங்கை, சிறிலங்கா போன்றவை இலங்கையின் வேறு பெயர்களாகும் ஈழம் என்ற பெயர் மிகத் தொன்மையானது. தற்போது தமிழர்கள் பெருவாரியாக வாழ்ந்து வரும் ஈழப்பகுதி தமிழீழமென அழைக்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் மிகப் பழங்காலந் துவங்கி இலங்கையில் வடக்கு, கிழக்கு, வடமத்தி, மற்றும் வடமேற்குப் பகுதிகளில் பரந்து செறிந்து வாழ்ந்து வந்திருக்கின்றார்கள். 2000 ஆண்டுகளுக்கு முன்னர் இப்படியாகத் தமிழர் வாழ்ந்த பகுதிகள் நாகதீவு என்ற பெயர் பெற்று விளங்கியுள்ளது. இந்த நாகதீவை நாககன்னிகைத் தெய்வத்தையும், நாக சர்ப்பத்தை வழிபட்டு வந்த நாகர் என்ற திராவிட சமுதாயத்தினர் ஆட்சி செய்து வந்திருக்கிறார்கள். கி. மு. முதலாம் நூற்றாண்டில் ரொலமி என்ற அறிஞர் வரைந்த இலங்கைப் படத்தில் இந்த நாகதீவு குறிக்கப்பட்டுள்ளது. இந்தப் படம் இப்போது பிரிட்டிஸ் அருங்காட்சியகத்தில் (Museum) காணப்படுகின்றது.

நாகதீவு பற்றிய செய்தியை சொல்லேருழவர் திரு ம. க. அந்தனிசில் அவர்கள் இலங்கை தினகரன் வாரமலரில் எழுதியிருக்கின்றார்.

---

# தலைகுனிவைத் தந்த தமிழாராய்ச்சி மகாநாடு

1995 ஆம் ஆண்டில் ஜனவரித் திங்கள் முதலாம் நாள் துவங்கி உலகத் தமிழாய்வு மகாநாடு தமிழ் நாட்டில் நடந்ததை அறிவீர்கள். அன்றைய தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்களின் அரசின் முழு ஒத்துழைப்புடன் இந்த மகாநாடு நடைபெற்றது. இந்த மகாநாட்டுக்குச் சென்று கலந்து கொள்வதற்கு வெளிநாட்டுத் தமிழறிஞர்கள் மற்றும் அயலகத் தமிழ்ப் பெரியார்களும் மறைமுகமான தடை போடப்பட்டிருந்ததை முன்னமே யாருக்கும் தெரியவில்லை. தமிழ் நாட்டிலும் பிரபலமான தமிழறிஞர்கள் அழைக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டார்கள். அங்கே பலர் மகாநாட்டுப்பக்கமே போகவில்லை. இலங்கையிலிருந்து சென்ற பல தமிழ் மாந்தர்கள் விமான நிலையங்களில் தடுத்து நிறுத்தப்பட்டு திருப்பியனுப்பப்பட்டார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது, இது ஒரு தமிழாராய்ச்சி மகாநாடாகத் தெரியவில்லை. தமிழ்ச் சமுதாயத்துக்காக நடாத்தப்பட்ட மகாநாடாகத் தோன்றவில்லை. இந்த மகாநாடு தமிழ்ச் சமுதாயத்துக்கு மிகவும் தலைக்குனிவை ஏற்படுத்திவிட்டது. இனி மேலாவது இப்படியான அவமதிப்புக்கள் தமிழ்ச் சமுதாயத்துக்கு ஏற்படாமல் இருக்கத் தமிழ்ப்பண்பாடு காப்பாற்றப்பட தமிழர்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

# அந்தமான் தமிழர்களின் கல்விக் குறைபாடுகள்

அந்தமான் நாட்டில் தமிழ்ச் சிறுர்களின் கல்வி நிலைமை வீழ்ச்சியடைந்து வரும் நிலைமை கவலை தருகின்றது. இங்கே தமிழ்க் கல்விக்கூடங்களில் தமிழ் கற்பித்தல் ஊடகங்கள் (மீடியாக்கள்) மூடப்பட்டு வரும் செயல் சாதாரணமாக நடந்து வருகின்றது. இதனுல் அந்தமான் நிக்கோபார் தமிழ்க் குழந்தைகள் தாய்மொழிக் கல்வியைப் பெறமுடியாமல் கஷ்டப்படுகின்றனர் இந்த நிலைமை வளர்வதால், தமிழ்ப் பிள்ளைகள் தமிழை எழுத வாசிக்க முடியாத அவலம் தோன்றிக் கொண்டிருக்கின்றது தமிழ்ப் பள்ளிகளில் தமிழ் படிப்பிக்கும் ஊடகங்களை மூடி ஆங்கில மீடியாக்களை ஆரம்பிக்கும் நடைமுறைகள் தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இதற்கு தமிழக அரசின் கல்வியமைச்சும் மற்றும் தமிழ்மொழி அமுலாக்கல் அமைச்சும் உடனடியாக நடவடிக்கையெடுத்துத் தமிழ்ப் பள்ளிகளில் தமிழ்மொழிப் போதனையை வளர்த்து விரிவாக்க முன்வர வேண்டும். இந்த விசயத்தில் தமிழக பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனமெடுத்து ஆவன செய்ய வேண்டும்.

— நன்றி "அந்தமான் முரசு"

---

# இண்டர் நெற் - கணிணியில் உ. த. ப. இயக்கம்

இண்டர் நெற் (INTER NET) என்று அழைக்கப்படும் சர்வதேச செய்திப் பரிமாற்ற ஊடகமான வலை இணையத்தில் உ. த. ப. வின் விபரங்கள் சேர்க்கப்பட்டுவிட்ட செய்தி கிடைத்துள்ளது, உ.த.ப. இன் வரலாறு, கிளைகள் விபரம், உ.த.ப ஏடுகள், நடந்த நடக்கும் மகாநாடுகள், மற்றும் மகாநாட்டு மலர்கள் நூல்கள், பிரசுரங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் வலை இணையக் கணிணியில் கிடைக்கின்றது. உலகில் எந்தப் பகுதியிலும், இந்த வகைக் கணிணிகளில் உ.த.ப கழகத்தின் விபரங்களை இப்போது எளிதாகப் பெற்று விடலாம் வலை இணையக் கணணி தொடர்பு எண் இதோ:-

(INTERNET) - IMTC - HTTP- II WW<br>
MSO. CH/IMTC<br>
E MAIL - IMTC (a)<br>
BLUE WIN CH.

# மறைந்துவிட்ட மாண்புடையோர் மறக்க முடியாத இருவர்

தமிழே பேச்சாக, தமிழே மூச்சாக, தமிழே வாழ்வாக வாழ்ந்த இந்த இரு தமிழ்ப் பெரியார்கள் என்றும் நினைவில் நிற்க வேண்டியவர்கள். தமிழை வளர்ப்பதிலும், ஆராய்வதிலும் பரப்புவதிலும் உழைத்து வந்த இந்த மாண்புடையோர் இருவரும் 1995ம் ஆண்டில் தமிழுலகை விட்டு மறைந்து விட்டனர். யாழ்ப்பாணப் புலவர்களான பல்கலைப் புலவர், பண்டிதர் க. சி. குலரத்தினம் மற்றும் புலவர் நா. சிவபாத சுந்தரனார் ஆகியோரே அந்த இரு அறிஞர்கள். முன்னவர் ஈழத் தமிழ்ப் புலவர்களின் வரலாற்றினை ஆய்வு செய்து நூல்கள் வெளியிட்டவர். செந்தமிழ் வளர்த்த செம்மல்கள், தமிழ் தந்த தாதாக்கள் போன்றவை இவரின் நூல்களில் சிலவாகும். புலவர் நா. சிவபாதசுந்தரனார் சங்கத்தமிழ்ப் பனுவல்களில் ஆய்வுகள் பல கண்டவர். பரவெளித்தத்துவம், புறப்பொருள் வெண்பா மாலை ஆகியன இவற்றுள் சிறப்பான நூல்களாகும். இந்த இரு பெரியார்களின் மறைவு தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு பேரிழப்பாகும்.

# நேரடி விமானப் போக்குவரத்து வேண்டும்

மொறிசியஸ் றியூனியன் தென்னாபிரிக்கா போன்ற தேசங்களிலிருந்து தமிழர்களும், மற்றையோரும் கல்வி மற்றும் உல்லாசப் பயணங்கள் போன்ற விசயங்களுக்கு தென்னிந்தியாவுக்கு வருகிறார்கள். இவர்கள் தமிழகப் பகுதிகளுக்கு வசதியாக வந்து போவதற்கு நேரடியான விமானச் சேவைகள் இல்லாதமை பெருங் குறைபாடாகும். மேற்படி நாடுகளிலிருந்து வருவோர் சென்னையில் தரித்துச் செல்வதற்கு நேரடி விமானச் சேவைகள் நடைபெறுவது பேருதவியாக இருக்கும். இதன் மூலம் உல்லாசப் பயணம், மற்றும் கலாச்சார நன்மைகளும் மேம்படும். ஆகையால் தமிழக அரசும், மத்திய அரசும், இந்த விடயத்தை கவனிக்க வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட மூன்று நாட்டு அரசுகளின் போக்குவரத்துத் துறைகளும் இது விசயத்தில் ஆர்வம் காட்டுவது பல வழிகளிலும் நன்மைபெற ஏதுநிலையுள்ளது.

எஸ். கந்தசாமி
வளலாய், தமிழ் ஈழம்.

# குறளோதும் அறிமுக விழா

மலேசியா - யூன் 97

25-06-1997ல் மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில். பொதுப்பணித்துறை அமைச்சர் ச. சாமிவேலர் தலைமையில் குறளோதுதல் அறிமுக விழாவும், பாவலர் முல்லைவாணரின் குறளுரை (இருவகைநூல்) வெளியீட்டு நிகழ்வும் சிறப்புற நடந்தேறியது. இவ்விழாவில் திருக்குறள் நினைவுமலர், குறளோதும் ஒலியிழை, குறளிசைப் பாடல்கள், திருக்குறள் நாடகம் ஆகியனவற்றை மாண்புமிகு அமைச்சர் வெளியிட்டுப் போற்றினார்.

வீடுதோறும், நாடுதோறும் திருக்குறளைத் தமிழறமாக ஓதி வருவது உலகத்தமிழர் கடமை. இதுவே இவர்களின் தலையாய பொறுப்பு. இன்று 42 நாடுகளில், கணிணி மூலமாக இன்டர்நெட்டில் இவ்வோதுதலைக் காணலாம். கேட்கலாம், என உ.த ப. இ. தலைவர் பேராசிரியர் வீரப்பனார் விழாவில் தொடக்கவுரை ஆற்றும்போது குறிப்பிட்டார். உலகத் திருக்குறள் மய்யங்கள் இணைந்து ஒருணர்வாகச் செயல்படட்டும் என்றாரவர்.

மலேசியாவில் தமிழ் மய்யமாக, திருக்குறள் பேரவை அமையுமென விழாவில் முடிவெடுக்கப்பட்டது. மூதறிஞர் டான்ஸ்ரீ உபைதுல்லா திருக்குறள் மாண்புகளை விளக்கினார். தமிழ்மணி புலவர் பட்டச் சான்றிதழை மலாயாப் பல்கலைத் தமிழ்த்துறைத் தலைவர் திருமதி. க. திலகவதி புலவர்களிடம் வழங்கினார்.

மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கமும், தலைநகர் திருக்குறள் களமும், உ. த, ப. இ. ஒப்புரவுடன் நடத்திய இவ்விழாவில் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களும், சான்றோர்களும் பங்கு பற்றினர்கள்.

தமிழகத்தில் புதுச்சேரியில் திருக்குறள் தமிழ்ப் பல்கலைக் கழகமும் அமைக்கப்பட்டு வருகின்றது என்றார் வீரப்பனார். விழாவில் மாரியப்பன், சண்முகம், திருச்சி லோகநாதன் பாபு மூவரும் குறளிசை பாடினர். இவர்கள் இசையமைத்த ஒலியிழையே விழாவில் பாடிப் புகழ் பெற்றன.

(மலேசியச் செய்தி)

# குறள் நெறி-நோய் செய்வார்

''நோயெல்லாம் நோய் செய்வார் மேலவாம் நோய்
— செய்யார்
நோயின்மை வேண்டுபவர் ''

இந்தப் பொய்யாமொழிதரும் உண்மையானது போற்றிப் பின்பற்றுதற்குரிய தொன்றாகும். இதில் உண்மையான அற நிலை பேசப்படுகின்றது. நீதி, நியாயம், தர்மம் கொண்டமைந்த வாழ்வியல் நிலைமை சொல்லப்படுகின்றது. மனிதன் மேன்மையாக வாழும் வழிவகை உரைக்கப்படுகின்றது இந்தக் குறளமுதம் காட்டும் கருப்பொருள் மனித ஆத்மாக்கள் புரிந்துணர்ந்து வாழத்தக்க நெறியாகும். இதில் பொதிந்து கிடக்கும் உண்மை மானுடனை அமைதியான நிம்மதியான வாழ்வுக்கு அழைத்துச் செல்லும். இந்தக் குறளில் சொல்லப்படும் நோய் என்பது துன்பங்களைக் குறிக்கின்றது. துன்பமும் ஒரு நோய் தானே! மனிதன் செய்கின்ற துன்பங்கள், கஷ்டங்கள் அனைத்தையும் இது குறிப்பிடுகின்றது.

எவ்வகையான துன்பங்களையும் மனிதன் மற்ற மனிதனுக்கோ உயிர்களுக்கோ செய்யும் போது அந்தத் துன்பங்கள் செய்தவர்கள் மேல் பழியாக வந்து சேர்ந்துவிடும். ஆகையினுல் துன்பம், கஷ்டம் இல்லாமல் வாழ விரும்புவோர் மற்ற மனிதர்களுக்கோ ஆத்மாக்களுக்கோ துன்பம் தரும் செயல்களைச் செய்யாமலிருக்க வேண்டும். இப்படியாக வாழ்வுக்கு வழிகாட்டும் நூற்றுக் கணக்கான குறள்தரும் தேன் அமுதங்கள் இருக்கின்றன. இவற்றை உணர்ந்து வாழும் மனிதன் புனிதனாகின்றுன். திருக்குறள் காட்டும் அறநெறி சார்ந்த அருமையான வாழ்க்கை மகத்தானதென்றுல் மிகையாகாது.

# போரும் சமாதானமும்

- கவிஞர் செ. பரமநாதன் -

போரும் சமாதானமும் வெவ்வேறுனவை. எதிர் எதிரான விளைவுகளைத் தருபவை. போர்ச் செயல்கள் மனித உயிர்களை மனித வாழ்வை மற்றும் பூமிச் செல்வங்களை அழித்து விடுபவையாகும். ஆனுல் சமாதானம் என்பது உயிர்களையும், வாழ்வையும் பூமிச் செல்வங்களையும் மேம்படுத்தி விருத்தி செய்து பாது

காப்பதாகும். ஆகையால் போரினால் சமாதானத்தை எக்காலத்திலும் கொண்டு வரமுடியாது. போர்கள் அதர்மகாரியங்களுடன் சம்பந்தமுடையவை. சமாதானம் என்பது முழுக்க முழுக்க தர்மச் செயல்களைக் கொண்டமைவதாகும். சமாதானம் தெய்வாம்சம் கொண்டது. ஆனல் யுத்தமோ ராக்கத குணங்களைக் கொண்டமைகின்றதென்பது உண்மைநிலையாகும்.

## தெய்வத்தமிழ்
(DEVOTIONAL LANGUAGE)

உலகத்தில் பேசப்படுகின்ற பிரபலமான மொழிகளில் தமிழுக்கு மட்டும் தெய்வீக மொழி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது. 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் தெய்வீகமான மொழி என்று இலக்கியங்கள் கூறுகின்றன. இதனை நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த திரு. ஜி. யூ. போப் என்ற தமிழ் மொழி வல்லுனர் தமிழ் தெய்வீகமானது என்று கூறியுள்ளார்.

பிரஞ்சு மொழி வெளிநாட்டுத் தூதுவர்களின் மொழி
AMBASSADOR'S LANGUAGE
ஜேர்மன் மொழி தத்துவ மேதைகளின் மொழி
PHILOSOPHER'S LANGUAGE
கிரேக்க மொழி இசை இன்பம் கொடுக்கும் மொழி
MUSICAL LANGUAGE
லத்தீன் மொழி சட்ட நிபுணர்களின் மொழி.
LANGUAGE OF LAW
ஆங்கிலம் வணிக மொழி
LANGUAGE OF COMMERCE
தமிழ் தெய்வீக மான மொழி—
DEVINE LANGUAGE

— கண. ஜீவகாருணியம் —

## புகைப்பிடிக்கும் பழக்கம் உண்டா?
## ஆயுள் குறைகிறது! கவனம்!

உலகில் புகைப்பிடிக்கும் பழக்கம் ஒரு நாகரிகமாக வளர்ந்து வருகின்றது சிகரட், சுருட்டுப் புகையில் உள்ள நிகொடின் நஞ்சு விஷத்தினால் புகைக்கும் பழக்கமுள்ள அநேக மனிதர்கள் நோய்களுக்காளாகிப் பலியாகியும் வருகின்றார்கள். புகைப்

(28ம் பக்கம் பார்க்க)

# உலகத் தமிழ்மறை திருக்குறள்
# ஓதுதல் முதல் அறிமுகவிழா

வணக்கம் 1974 சுறவத்திங்களில் அமைக்கப்பட்ட உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் மலேசியக் கிளையாகப் பதிவு செய்யப்பட்டது மலேசியத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம். இதன் கொள்கைகளில் தலையானது உலகத் தமிழ்மறையாம். திருக்குறள் நன்னெறிக் கோட்பாடுகளைப் பரப்புவதும், வாழ்வியலில் கடைப்பிடிப்பதுமாகும். 1990ஆம் ஆண்டு முதல மலேசியத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கம் ''தமிழிய நெறிப் பேரவைக் கூட்டம்'' கூட்டித் திருக்குறளைத் தமிழ் மறையாகக் கொண்டு ஓதி வருவதை நடைமுறையில் கண்டிப்பான ஒழுங்கு முறையாகத் தமிழ் மக்களிடம் பரப்பி வருகின்றது. மேலும் தமிழர் வாழ்வியலில் நடைபெறும் எல்லா மங்கல அமங்கல நிகழ்வுகளிலும் திருக்குறளுக்கே முதன்மை வழங்கப்படுகின்றது. சிங்கப்பூர், தமிழகம், பர்மா இன்னும் இதுபோன்ற தமிழர்கள் வாழும் 40 நாடுகளில் திருக்குறள் களப்பணிகளை இவ்வியக்கம் மேற்கொண்டிருப்பதோடு உலகத் தொடர்புறவுகளையும் ஏற்படுத்திச் செயற்பட்டு வருகின்றது.

''உலகத் தமிழ் மறை திருக்குறள் ஓதும் முதல் அறிமுக விழா''வில் இதன் ஒலியிழை வெளியீடும், திருக்குறள் குடும்பங்கள் வாழ்வு முறை தொடர்பான பிற நிகழ்வுகளும் மிகச் சிறப்பாக நடாத்தப்பட்டன. உலகத்தமிழர் அனைவரும் பின்பற்றத் தக்க வகையில் ஓதுதல் அறிமுகம் உரைப் பொழிவுகளும் இந்நிகழ்ச்சியில் இடம் பெற்றன என்பதை மகிழ்வுடன் அறிவித்துக் கொள்கிறோம். இந்நிகழ்வு திருக்குறள் பணிக் களத்தின் நிகழ்ச்சியாக நடைபெறும். இதன் பொறுப்பாளராகத் திரு ஏசு.பி சிவக்குமார் அவர்கள் நியமிக்கப் பெற்றார். துரை இலக்குமணன் நிகழ்வை நடத்தினார்.

இந்தச் சிறப்பு மிக்க நிகழ்ச்சியில் திருக்குறள் புரவலர்களின் அறக்கொடையில் ''உலகத் தமிழ் மறை திருக்குறள் ஓதுதல் அறிமுக விழா நினைவுமலரும் வெளியிடப்பட்டது. தமிழர் இல்லங்கள் தோறும் வைத்து இம்மலர் பேணப்படவுள்ளது.

**திரு. மு. மணி வெள்ளையன் மலேசியா**

புகைப்பிடிக்கும்...... ... 26ம் பக்கத் தொடர்ச்சி

பிடிக்கும் பழக்கத்தினால் மனிதன் தனது ஆயுள் காலத்தில் நாளாந்தம் 05 நிமிடத்தை இழந்து விடுகின்றானென்று விஞ்ஞானிகள் கணித்துக் கண்டு பிடித்துள்ளனர். மேற்கு நாடுகளில் புகைப்பிடிப்போர் லட்சக்கணக்கில் இருக்கின்றார்கள். தற்போதைய பிரிட்டிஸ் பிரதமர் திரு.ரோனி பிளேயர் அவர்களுக்கு (வயது 44) புகைத்தல் பழக்கம் பிடிக்காதாம் அவர் புகைப்பிடிப்பதில்லையாம்.

சி.செல்வராசா, மீசாலை.

---

# ஆப்கானிஸ்தான் அலங்கோலம்

தலிபான் என்றால் இக்காலத்தில் பலரும் அறிந்த பெயராகும். ஆப்கானிஸ்தான் நாட்டில் பெரும் பகுதியை தலிபான் என்ற இஸ்லாமிய அடிப்படைவாத போராளிகள் இயக்கம் கைப்பற்றி ஆட்சி செய்கின்றது. தற்போது தலிபான்களின் ஆட்சியில் ஆப்கான் நாட்டுப் பெண்கள் சமுதாயம் அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டுள்ளது. பெண்கள் கல்லூரிகளில் கல்வி கற்கக்கூடாது. அவர்கள் தம் முழு உடலையும் ''பர்தா'' அணிய வேண்டும். அவர்கள் வீடுகளுக்குள்ளே அடங்கியிருக்க வேண்டும். கடைக்கோ அல்லது வேலை செய்வதற்கோ வெளியே செல்லக் கூடாது, போன்ற அடக்குமுறைச் சட்டங்களை தலிபான் நிர்வாகம் பிறப்பித்துள்ளது. ஆண்கள் தாடி வளர்க்க வேண்டும் என்ற கட்டளையினால் தாடி வழிக்கும் இளைஞர்கள் தண்டிக்கப் படுகின்றார்கள். எப்படி இருக்கின்றது தலிபான்களின் சர்வாதிகாரம் பார்த்தீர்களா?

(உலகச் செய்தித்துறை)

---

தமிழ்எழுத்துச்சீர் ...........தொடர்ச்சி

நடப்பதாகச சொல்லப்பட்டது. ஆனால் கணணியை உருவாக்கி வரும் பல தமிழ் மேதைகள் இதைப் பொய்யாக்கிவிட்டனர். எந்த எழுத்திலும் கணணியை வடிவமைக்கலாமென்று நிரூபித்து விட்டார்கள். இதனை கனடா ''றிப்லெக்ஸ்'' அச்சகத்தார் செயலில் காட்டி வருகின்றார்கள். எனவே இனிமேலாவது, தமிழக அரசு மற்றும் இலங்கை தமிழ் அமுலாக்கல் பகுதியினர் நீக்கப்பட்ட 13 தமிழ் எழுத்துக்களையும் நடைமுறைக்குக் கொண்டுவர ஆவன செய்ய வேண்டுமென்பது உண்மையான தமிழ் அபிமானிகளின் வேணவாவாகும்.

யாழ் நகரில்

# "இளவரசி"

# சேலைச் சோலை

விதம்விதமான

முகூர்த்த பட்டுப்பிடவைகள்

விரும்பிய ரகங்களில்

தெரிவு செய்ய

**வண்ணச் சேலைகள்**

**மனங்கவரும் துணிமணிகள்**

விரும்பி வாங்க சிறந்த இடம்

## "இளவரசி" சேலைச்சோலை

யாவும் தரமானவை நீடித்துழைப்பவை.

57, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்

ஸ்ரீ சாயி பிறின்ரேஸ்
2/5 துரைராஜா வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.